MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சூழலியல் நோக்கில் நீரதிகாரம்

ச. ரேணுகா
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
தமிழ் உயராய்வுத் துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641 018
srenu17230@gmail.com
9360454906

**நெறியாளர்**
முனைவர் மொ.இரவிக்குமார்
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வுத் துறை
அரசு கலைக் கல்லூரி(தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641 018
9443486408

RENUKA. S
PHD (FULLTIME) TAMIL
GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS)
COIMBATORE

GUIDE
DR.M.RAVIKUMAR
ASSISTANT PROFESSOR
DEPARTMENT OF TAMIL
GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS )
COIMBATORE-641018.

JULY – AUGUST

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

# Water rights from an ecological perspective


## Abstract:

It is natural that living things cannot survive in the world without the five elements - earth, water, air, sky, and fire. Therefore, the ancestors lived a life in harmony with nature.
Today, man has learned to destroy nature and create life. As a result, the survival of life is becoming increasingly difficult. Humans, as intelligent beings, must come forward to control this. Ecological balance is essential for the survival of all living things. The government, many charities, and individuals are creating awareness in various ways to protect the environment. In this way, this study examines the ecological ideas expressed in the novel Neerathikaram written by writer A. Vennila.

**ஆய்வுச் சுருக்கம்**;

உலகில் ஐம்பூதங்கள் ஆகிய நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு இவை இல்லாமல் உயிர்கள் வாழ முடியாது என்பது இயற்கை. எனவே, முன்னோர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தனர். இன்று இயற்கையை அழித்து, வாழ்வை உருவாக்க மனிதன் கற்றுக் கொண்டுள்ளான். இதனால் உயிர்கள் வாழ்வதென்பது சிறிய காலமாக அருகி வருகின்றது. இதனை கட்டுப்படுத்த ஆறறிவு உயிரியான மனிதர்கள் முன்வர வேண்டும். அனைத்து உயிர்களும் வாழச் சூழலியல் சமநிலை இன்றியமையாதது ஆகின்றது. சூழலியலைக் காக்க அரசும், பல தொண்டு நிறுவனங்களும், மனிதர்களும் பல வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். அவ்வகையில் எழுத்தாளர் அ.வெண்ணிலா அவர்கள் எழுதிய நீரதிகாரம் நாவல் வெளிப்படுத்தும் சூழலியல் கருத்துக்களை ஆய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**முன்னுரை**

சூழலியல் என்பது உயிர்கள் வாழும் சூழலுக்கும், உயிர்களுக்கும் உள்ள உறவை பேணுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அறிவியல் கோட்பாடாகும்.

மக்கள் வாழும் இப்புவியில் மனிதர்கள் மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான உயிர்கள் வாழ்ந்து வருகின்றன. அத்தகைய உயிர்களுக்கு இன்றியமையாத தேவை ஐம்பூதங்கள். அவற்றைப் பற்றியும், சூழலை பற்றியும்இ உயிர்கள் ஒன்றி வாழும் இயற்கையை பற்றியும், எழுத்தாளர் அ. வெண்ணிலா அவர்கள் எழுதிய நாவல் நீரதிகாரம். பெயருக்கேற்ப ஐம்பூதங்களில் ஒன்றாகிய நீரை பற்றியும், நீரை தேக்கி வைக்க பயன்படும் அணையை அடிப்படையாகக் கொண்டும் இயற்றப்பட்டுள்ளது.

இயற்கையின் சமநிலையைப் பேண அடிப்படையான நீரைக் கொண்டு சூழலியல் நோக்கில் கதை நகருகிறது. நூலின் பக்க வரையறை அதிகமாக இருப்பதால் முதல் 200 பக்கங்கள் மட்டும் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் காணப்படும் சூழலியல் கருத்துக்களை ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**இயற்கையின் பெருந்தத்துவம்**;

இயற்கையின் பெருந்தத்துவம் என்பது பிரபஞ்சத்தின் அடிப்படை இயல்புகள் மற்றும் செயல்பாடுகளின் தொகுப்பாகும். இதனை பிரபஞ்சத்தின் தோற்றம்இ பரிணாமம்இ கட்டமைப்பு மற்றும் அதன் அனைத்து கூறுகளின் தொடர்புகள் பற்றிய ஆழமான புரிதலை உள்ளடக்கியது என்கிறோம்.

இயற்கையின் பெருந்தத்துவம், பிரபஞ்சத்தின் தோற்றம்இ இயற்கை விதிகள், உயிரினங்களின் பரிணாமம், சூழலியல், சுய ஒழுங்கு, சமநிலை என்ற அம்சங்களை கொண்டுள்ளது. இவற்றுள் ஏதேனும் ஒன்று பாதிக்கப்பட்டாலும், உலக அழிவு என்பது உறுதி செய்யப்படுகிறது.

எனவே தான் தொல்காப்பியர்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

“**நிலம், நீர், வளி, விசும்பெரு**

**ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்**” விளக்கி உள்ளார்.

**(தொல்காப்பியம் பொருள், 635)**

இவற்றில் ஒன்றும் மாசுபட்டாலும் மிகுதியாக இருக்கும் அனைத்தும் செயலிழந்து விடும் என்பது இயற்கை.

இயற்கையை அடிப்படையாகக் கொண்டே முன்னோர்கள் நிலத்தை ஐவகையாக பகுத்தனர்.

“**மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை, குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**

**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே**”

**(தொல்காப்பியம்,பொருள்.5)**

என்று முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என தொல்காப்பியர் வகைப்படுத்திக் கூறுவதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

எனவே சங்க கால மக்களான முன்னோர்கள் ஐந்திணை அடிப்படையில் இயற்கையை கடவுளாக வணங்கி வந்தனர்.

இக்கருத்தை மெய்ப்பிக்கும் வண்ணம் க.கைலாசபதியின் ‘பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்’ என்ற நூலில் **“மரவழிபாடு பூர்வீக மக்களின் சொத்தாக இருந்தது. சிந்துவெளியில் அரசமரக் கிளைகளுக்கிடையில் ஆடைகளின்றிப் பெண் தெய்வமொன்று காணப்படுகிறது. மக்கள் உருவங்களும் விலங்குருவங்களும் அவ்வன்னைத் தெய்வத்திற்கு அடிபணிந்து அஞ்சலி செய்கின்றன” என்று சான்று பகிர்கின்றார்**

**(க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப.5)**

**சூழலியல்;**

ஐம்பூதங்களின் சமநிலையினால் அமைவது சூழலியல் என்பது அறிந்த ஒன்றே ஆகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**“நீரின்றி அமையாது உலகினில் யார்யார்க்கும்**

**வானின்றி அமையாது ஒழுக்கு”.(குறள். 20)**

இக்குறளில் நீரின்றி அமையாது உலகு அதுபோல, மழை பெய்யாவிட்டால் ஒழுக்கம் என்பது இல்லாமல் போய்விடும் என்கிறார் திருவள்ளுவர் உலக சூழ்நிலையின் தேவையை அறிந்து கொள்ள முடிகின்றது.

**“இயற்கை என்பது ஒரு முழுமையான நிரந்தர இயல்பாகும். மனிதன் இயற்கையை சார்ந்து உயிர் வாழ்கின்றான். அவன் தனது வாழ்க்கை தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்து எடுத்துக் கொள்கிறான். இயற்கையில் மனிதன் ஓர் அங்கம் என்று அறிஞர் மார்க்ஸ் விளக்குகிறார்”. (ராம்தேவ். ஐ,பகுத்தறிவின் கிரகம், ப.19)**

இவ்வாறு இயற்கையில் மனிதன் பெரும் இடத்தை விளக்கியுள்ளனர் சூழலியல் அறிஞர்கள்.

இயற்கையின் அங்கமாக மனிதன் உள்ளான் என்பதை மேலே கண்டோம் ஆனால் மனிதன் இயற்கையை அழிக்க முன் நிற்கின்றான் மனிதனின் தேவைக்காக பலவாறு காடுகளை அழிக்கவும் நீரையும் காற்றையும் மாசுபடுத்த கற்றுக் கொண்டு விட்டான் மனிதன் நினைப்பது போல் மிக எளிமையாக உருவாக்கப்பட்டதல்ல இந்த இயற்கை என்பதை,

**“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்” (திருவாசகம்,பா.26-32)**

இவ்வாறு ஒவ்வொன்றாக உருவாகியது இந்த இயற்கை என்று படிப்படியாக கூறியுள்ளார் மாணிக்கவாசகர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

இயற்கையையும், உலகையும் ஒன்றாக எண்ணி வாழ்பவன் மனிதன். அவன் இயற்கையை சேதப்படுத்துவது என்பது இவ்வுலகைச் சேதப்படுத்துவதற்கு ஒப்பாகின்றது.

**இலக்கியத்தில் சூழலியல் பெறும் இடம்;**

நாம் சுற்றியுள்ள சூழலையும், உலகையும் பற்றி பேசுகின்றது சூழலியல். அதுபோலவே இலக்கியமும் சுற்றியுள்ள சூழலையும், மக்களையும் பற்றியதாகவே அமைகின்றது.

திறனாய்வு அறிஞர் க. பஞ்சாங்கம், **“இலக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள உறவினைக் கற்பதே சூழலியல் திறனாய்வு” என்கிறார்.**

**(க. பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வு கோட்பாடும், ப.257)**

இதன் மூலம் சூழலியல் இலக்கியத்தில் மிக முக்கிய இடத்தை பெறுவதை அறிய முடிகின்றது.

சங்க இலக்கிய காலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வையே வாழ்ந்தனர். அது மட்டுமல்லாமல் சங்க இலக்கிய காலத்து நிலத்தைஇ ஐவகை நிலமாகச் சூழல் அடிப்படையில் பிரித்து வகைப்படுத்தியுள்ளனர்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலையென சூழல் அடிப்படையில் பிரிக்கப்பட்ட நிலத்தினை மையமாகக் கொண்டே சங்க இலக்கியப் பாக்கள் இடம் பெற்றுள்ளன.

“**மண் திணிந்த நிலனும்,**
**நிலன் ஏந்திய விசும்பும்,**
**விசும்பு தைவரு வளியும்,**
**வளித் தலைஇய தீயும்,**
**தீ முரணிய நீரும்இ என்றாங்கு**
**ஐம் பெரும் பூதத்து இயற்கை”(புறம். பா.2)**

இப்பாடலில் ஐம்பூதங்களை வகைப்படுத்தி அவையை இயற்கை என்று கூறப்பட்டுள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

அதேபோன்று நற்றிணையில்,

“**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**

**அன்னை கூறினள் புன்னையது நலனே”(நற்றிணை,பா.172,4-5)**

இப்பாடல் அன்னை, ‘உன்னைவிட உன் தங்கையான புன்னை மரம் சிறந்தது’ என்று கூறுவதாக அமைந்துள்ளது. இதனால் சங்க இலக்கிய மக்கள் மரத்தையும் தம்முள் ஒருவராக எண்ணியது வியக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல்இ இன்றும் நமது வீடுகளில் ‘உன்ன பெத்ததுக்கு ஒரு மாட்ட பெத்து இருந்தா பாலாவது குடுத்து இருக்கும்’ என்று திட்டுவது வழக்கமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

“**மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்**

**பொங்குபிதிர்த் துவலையொடு மங்குல் தைஇக்**
**கையற வந்த தைவரல் ஊதையொடு**
**இன்னா உறையுட் டாகும்**
**சின்னாட் டம்மவிச் சிறுநல் லூரே”(குறுந்தொகை. பா.55)**

தலைவனைப் பிரிந்த தலைவியின் வருத்தத்தை தோழி சிறைப்புறமாகத் தலைவனிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலில் மார்கழி குளிரும்இ அக்குளிரால் பூக்கள் தம் இதழ்களைக் குவித்துக் கொள்கின்றன. அக்குளிரால் நீர்த்துவலைகள் உருவாகி மழையாகப் பொழிகின்றன. இந்நாட்டில் இவள் தனிமைக் கொடியது என்று இயற்கையை வர்ணிக்கிறாள் தோழி. இவ்வாறு சங்க இலக்கியப் பாடல்கள் முதல் இன்று வரை அனைத்தும் சூழலியலை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டு வருகின்றன.

**புதினங்களில் சூழலியல் பெறும் இடம்**;

தமிழில் உள்ள அனைத்து இலக்கிய புதினங்களும் சுற்றுச்சூழலை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

பற்றி பேசாமல் இருந்ததில்லை. எல்லா புதினங்களும் ஏதோ ஒரு வகையில் சூழலியத்தை பற்றி பேசுகின்றன. அவற்றும் குறிப்பிடத்தக்க புதினங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

நக்கீரன் அவர்களின் நீர் பற்றாக்குறை பற்றி அலசும் 'நீர் எழுத்து' மற்றும் மழைக்காட்டின் அழிவைப் பேசும் 'காடோடி' புதினங்கள் புகழ்பெற்றவை.

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான பிணைப்பு,போராட்டம், காடுகளின் அழிவுகளைப் பேசும் சா. கந்தசாமி அவர்களின் 'சாய வனம்' புதினம் குறிப்பிடத்தக்கது.

சுப்ரபாரதிமணியனின் இயற்கைக்கு அழிவை ஏற்படுத்தும் வண்ணப்பூச்சுக்கள் பற்றி பேசும் 'சாயத்திரை', மனிதன் தன்னால் ஏற்பட்ட தீங்கையும், தன் அடுத்த தலைமுறை குறித்த அக்கறையையும் பேசும் 'புத்து மண்' ஆகியவை சுற்றுச்சூழல் பிரச்சனைகளை பேசும் நாவல்களாக வெளிவந்துள்ளன.

இவ்வாறு சூழலியல் சார்ந்து அன்றியிலிருந்து நூல்கள் தொடர்ச்சியாக வெளிவந்த வண்ணம் உள்ளன. அவற்றில் அ. வெண்ணிலா எழுதிய நூலாக நீரதிகாரம் இடம் பெற்றுள்ளது.

**நீரதிகாரம்**;

நீரதிகாரம் என்பது அ. வெண்ணிலா என்பவரால் எழுதப்பட்டு, விகடன் பிரசுரம் வெளியிட்ட நாவலாகும்.

நீரதிகாரம் – நீர்+அதிகாரம் என்று பிரித்து எழுதலாம்.

இங்கு நீர் என்பது தண்ணீரை குறிக்கிறது. அதிகாரம் என்பது நீரின் மேல் அதிகாரத்தை செலுத்துபவர்களை குறித்து நிற்கின்றது.

நீர் என்பதற்கு நீர், நீர்மம், நீர்மை என்ற பொருட்களை தமிழ் விக்சனரி விளக்கம் தருகிறது.

அதிகாரம் என்பதற்கு அதிகார எண், அதிகார வைப்பு, அதிகார முறை என பொருள் தருகிறது விக்சனரி.

இந்நாவல் நீரின் மீது அதிகாரம் செலுத்துபவர்களைப் பற்றியும், நீரை பற்றியும் பேசுவதால் இப்பெயர் பெற்றது எனலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**நீரதிகாரம் நாவல் வெளிப்படுத்தும் சூழலியல்;**

இயற்கைக்கு முரணாக வாழ கற்ற மனிதனால் பல இயற்கை பேரிடர்களும், சீற்றங்களும் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே தான் சூழலைக் காக்க வேண்டும் என்ற அடிப்படையில் சூழலியல் சார்ந்த நாவல்கள் வெளிவரத் துவங்கின. அத்தகைய சூழலியல் நாவலான நீரதிகாரம்,

"**இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு பஞ்சம் எப்படி வரும்? வளம் நிறைந்த இந்நாட்டில் பஞ்சம் இயற்கையின் சதி அல்ல; பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுக்கும் கொடை. விவசாயி தன் கிணற்றைப் பராமரிக்கவில்லை. ஊர்காரர்கள் கண்மாயைத் தூர்வாரவில்லை. அரசர்கள் நீர்நிலைகளை மறந்தே விட்டனர்". (நீரதிகாரம், ப. 22)**

இவ்வாறு நீர் நிலைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகிறது.

நம் நாடு மூன்றில் ஒரு பங்கு நீரால் ஆனது. அந்நீர் ஆவியாகியும் மழை நீராகப் பொழிகின்றது. இச்சுழற்சி தொடர்வதால் மக்கள் வளமாக வாழ முடிகின்றது. இதனை,

"**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது."(குறள்.16)**

என்ற குறல் அடிகளால் அறிந்து கொள்ள முடிகின்றது.

இதே கருத்தை நாவலில், **"வீணா கிடக்கிற காடு. வீணாப் போற தண்ணி. முல்லை பெரியாறு ஆறுகள்ல ஓடிவர்ற தண்ணியும் வீண். மழை தண்ணியும் வீண். அதைத் திருப்பி விட்டா மதுரை வட்டாரமே பொழைச்சிக்கும்" (நீரதிகாரம்,ப.30)**

என்ற கருத்தில் மழை நீர் வீணாக கடலில் கலப்பதை நிறுத்திஇ அணைக்கட்டி தேக்கி வைத்தால் ஊரே வளம் பெறும் என்று கூறப்பட்டுள்ளது.

"**சுற்றுச்சூழல் திறனாய்வு என்பது இலக்கியத்தில் உள்ள இயற்கையை ஆராய்வதன்று. இது ஓர் இயற்கைச் சார்ந்த உலக பார்வை மனித இனத்தோடு மனிதன் அல்லாதவைகளையும்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**அவைகளின் சுற்றுச்சூழல்களையும் ஒரே இனமாக இணைத்து மனித இனத்தைப் பெருக்கிக் காட்டும் முயற்சியாகும்" என்று கூறுவார் சூழலியல் திறனாய்வு அறிஞர் மைக் பி.ரான்ச்." (கி. வெங்கட்ராமன் அரசியல் பொருளியல் ப.62)**

இதில் மக்களைப் போன்று விலங்குகளையும் தம்முள் ஒருவராக பார்க்கும் வண்ணம் அமைவதே சூழலியல் என்று விளக்கியுள்ளார்.

**"டாமினேஷன் என்றழைத்து குதிரையின் பிடரியில் தடவிக் கொடுத்த ஹானிங்டன்" (நீரதிகாரம், ப .35)**

இதனால் அறிஞர் கருத்தை மெய்ப்பிக்கப்பட்டது போல் குதிரையை தண்ணீரில் ஒருவராக பெயர் சொல்லி அழைத்திருப்பது புரிகின்றது. இந்நாவலில் குதிரை மட்டுமல்லாமல்இ பல உயிரினங்கள் பலவகைப்பட்ட தாவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை 'சூழல் பன்மியத் தன்மை' கொண்ட இடமாக அறிஞர்கள் சுட்டுகின்றனர்.

**"ஒரு காடு பலவகையான மரங்களையும், செடி கொடிகளையும், விலங்கினங்களையும் கொண்டது. அக்காட்டின் உயர்வுச் சிறப்பினை எடுத்துரைக்க அதில் எத்தனை வகையான உயிரினங்கள் இருக்கின்றன என்பதை வைத்து கணிக்க முடியும். மிக அதிக எண்ணிக்கையிலான உயிரினங்கள் இருக்குமாயின் அது வளமிக்க காடு எனலாம்" இதனை சூழலியல் 'உயிர் பன்மியத்தன்மை' என்று அழைக்கின்றனர்.(பா.மயன்இ உயிர் பன்மீயம், ப -92)**

அவ்வகையில் நாவலின் தொடக்கத்திலேயே 'கப்பக்கிழங்கு' உணவாக பயன்பட்டதாக சுட்டப்பட்டுள்ளது. அதன்பின் பறவை இனங்களாக கரிசான் குருவி, அக்காக்குருவி, நாகணவாய் பறவை, பெட்டைகள், காட்டுச் சேவல்கள், இருவாச்சி, வால் கரிச்சான், முக்குருணி போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**“விலங்கு எனப்படுவது இடம்பெயரக்கூடியது தாமே உணவு தயாரிக்க முடியாது வளர்ச்சி வரம்பு உடையது”**

**(சு. இராமேசுவரம், தமிழில் அறிவியல் கருத்துக்கள், ப.259)**

விலங்குகளாக கருங்குரங்கு, காட்டுப்பூனை, மரநாய், முள்ளம்பன்றி, கீரி,காட்டுப்பன்றிகள், கடமான்கள், காட்டு மாடுகள், புலிகள்,மான்கள், யானை போன்றவை காட்டில் வாழ்ந்தன என்று கூறப்பட்டுள்ளது.

இக்கருத்தின் அடிப்படையில் தாவரங்களைத் தவிர பிற அனைத்து உயிரினங்களும் மனிதன் உட்பட விலங்கினத்தின் ஒரு பிரிவாகவே உயிரியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

விலங்கினங்கள் சிந்திக்கும் ஆற்றல் இல்லாதவை ஆயினும் சூழலுக்கு எவ்வித தீங்கும் ஏற்படுத்துவதில்லை. சிந்திக்கும் ஆற்றல் உடைய மனித இனம் மட்டுமே சூழலியலை சீர் கெடுக்கும் செயல்களில் ஈடுபடுகின்றது. எனவே சூழலை பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாக எண்ணி செயல்பட வேண்டும்.

முடிவுரை;

- சூழலியல் என்பது உயிர்கள் வாழும் சூழலுக்கும், உயிர்களுக்கும் உள்ள உறவை பேணுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அறிவியல் கோட்பாடாகும்.
- இயற்கையின் பெருந்தத்துவம், பிரபஞ்சத்தின் தோற்றம், இயற்கை விதிகள், உயிரினங்களின் பரிணாமம், சூழலியல், சுய ஒழுங்கு, சமநிலை என்ற அம்சங்களை கொண்டுள்ளது. இவற்றுள் ஏதேனும் ஒன்று பாதிக்கப்பட்டாலும், உலக அழிவு என்பது உறுதி செய்யப்படுகிறது.
- தமிழில் உள்ள அனைத்து இலக்கிய புதினங்களும் சுற்றுச்சூழலை பற்றிய பேசாமல் இருந்ததில்லை. எல்லா புதினங்களும் ஏதோ ஒரு வகையில் சூழலியத்தை பற்றி

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

பேசுகின்றன. அவற்றும் குறிப்பிடத்தக்க புதினங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

- எழுத்தாளர் அ. வெண்ணிலா அவர்கள் எழுதிய நாவல் நீரதிகாரம். பெயருக்கேற்ப ஐம்பூதங்களில் ஒன்றாகிய நீரை பற்றியும், நீரை தேக்கி வைக்க பயன்படும் அணையை அடிப்படையாகக் கொண்டும் இயற்றப்பட்டுள்ளது.
- நீரின்றி அமையாது உலகு அதுபோல, மழை பெய்யாவிட்டால் ஒழுக்கம் என்பது இல்லாமல் போய்விடும் என்கிறார் திருவள்ளுவர் உலக சூழ்நிலையின் தேவையை அறிந்து கொள்ள முடிகின்றது.
- இயற்கையையும், உலகையும் ஒன்றாக எண்ணி வாழ்பவன் மனிதன். அவன் இயற்கையை சேதப்படுத்துவது என்பது இவ்வுலகைச் சேதப்படுத்துவதற்கு ஒப்பாகின்றது.
- இந்நாவலில் குதிரை மட்டுமல்லாமல், பல உயிரினங்கள் பலவகைப்பட்ட தாவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை ‘சூழல் பன்மியத் தன்மை’ கொண்ட இடமாக அறிஞர்கள் சுட்டுகின்றனர்.
- விலங்கினங்கள் சிந்திக்கும் ஆற்றல் இல்லாதவை ஆயினும் சூழலுக்கு எவ்வித தீங்கும் ஏற்படுத்துவதில்லை. சிந்திக்கும் ஆற்றல் உடைய மனித இனம் மட்டுமே சூழலியலை சீர் கெடுக்கும் செயல்களில் ஈடுபடுகின்றது. எனவே சூழலை பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாக எண்ணி செயல்பட வேண்டும்.

பார்வை நூல்கள்;

1.நீரதிகாரம் நாவல், அ. வெண்ணிலா, முதல் பதிப்பு -டிசம்பர் 2024, விகடன் பிரசுரம்,757, அண்ணா சாலை, சென்னை - 600002
2.திருக்குறள் மூலமும் உரையும், புலியூர் கேசிகன், பரிமேலழகர் உரை,127, பிரகாசம் சாலை, சென்னை.
3.திருவாசகம், இராமசுப்பிரமணியம் உரை, திருமகள் நிலையம், வெங்கட்நாராயணா சாலை, தி. நகர், சென்னை -600 017
4.புறநானூறு, எட்டுத்தொகை உரை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

5.நற்றிணை, எட்டுத்தொகை உரை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

6.தொல்காப்பியம் - பொருளதிகாரம் மூலமும் உரையும்,(உ-ஆ) திருஞானசம்பந்தர், முதல் பதிப்பு-2020, கதிர் பதிப்பகம்ஃ திருவையாறு - 613204.

7.குறுந்தொகை மூலமும் உரையும், (உ-ஆ) புலியூர் கேசிகன், முதல் பதிப்பு-2021, குமரன் பதிப்பகம், கண்ணதாசன் சாலை, தி.நகர் சென்னை- 600 017

8.அரசியல் பொருளியல், கி. வெங்கட்ராமன், முதல் பதிப்பு- 2019, 21 முதல் தெரு, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை- 600 078.

9.பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், க. கைலாசபதி, முதல் பதிப்பு-2016, காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி. சாலை, நாகர்கோவில் – 629 001.

10.இலக்கியமும் திறனாய்வு கோட்பாடும், க. பஞ்சாங்கம், முதல் பதிப்பு-2016, அன்னம் அகரம் பதிப்பகம், பிளாட் 1, நிர்மலா நகர், தஞ்சாவூர்-613 007